# இளைய பாரதமே, எழுந்திரு!

## இளைஞர் முகாம் - தமிழ்நாடு - 2019

நவம்பர் 29, 30, டிசம்பர் 1, 2019 (வெள்ளி, சனி, ஞாயிறு)

**18 முதல் 30 வயது வரை உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளலாம்**

முகாம் நடத்துபவர்கள்: **ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்** (தலைமைச் செயலகம், பேலூர் மடம், வங்காளத்தின் கிளை மையம்)
SRKV அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் 641 020. தொலைபேசி: 0422-269 2676, அலைபேசி: 99449 41427
மின்னஞ்சல்: ycsrkvcbe20@gmail.com, இணையதளம்: www.srkv.org

**முகாம்:** இம்முகாமில் பக்திப்பாடல்கள், தியானம், பஜனை, யோகா, சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகள், கேள்வி-பதில் நேரம், பங்குபெறுவோரின் கட்டுரை சமர்ப்பித்தல், கலந்துரையாடல், விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடைபெறும்.

**முகாமின் நோக்கம்:** தேசிய விழிப்புணர்வு – இளைஞர்களை நாட்டுக்காக அர்ப்பணிக்கும் புனிதமான பணியில் ஈடுபடுத்தி நல்வழி காட்ட, தேசத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட சுவாமி விவேகானந்தர் போன்றோரை முன்னோடிகளாக வைத்து நடத்துவது.

### முகாமின் அன்றாட நிகழ்வுகள்

**காலை**

| | |
|---|---|
| 05:00 | : துயிலெழுதல் |
| 06:00 - 09:00 | : பக்திப்பாடல், தியானம், யோகா, சிற்றுண்டி |
| 09:00 - 12:30 | : இரு சொற்பொழிவுகள், கேள்வி-பதில் தேனீர் இடைவேளையுடன் |

**மதியம்**

| | |
|---|---|
| 02:00 - 04:45 | : கலந்துரையாடல், கட்டுரை சமர்ப்பித்தல், கேள்வி-பதில் |
| 05:00 - 06:00 | : விளையாட்டுகள் |
| 06:00 - 08:00 | : பிரார்த்தனை, Video film, இரவு உணவு |
| 08:00 - 09:30 | : கலை நிகழ்ச்சிகள் |

### கலந்துரையாடல், பேச்சு, கட்டுரை சமர்ப்பித்தலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைப்புகள்

- ✦ சுவாமி விவேகானந்தரும் தேசப்பற்றும்
- ✦ சமுதாய வளர்ச்சியையும் மதநல்லிணக்கத்தையும் சார்ந்ததே ஒரு நாட்டின் முன்னேற்றம்
- ✦ இன்றைய இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் செய்தி
- ✦ இந்திய பாரம்பரியமும், பண்பாடும்
- ✦ ராமாயணம் கூறும் வாழ்வியல் நெறிமுறை
- ✦ மகளிர் மேம்பாட்டில் இளைஞர்களின் பங்கு
- ✦ மனிதனை முழுமைபெறச்செய்யும் கல்வி
- ✦ சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள்

விருப்பமுள்ள இளைஞர்கள் **20-11-2019**-க்குள் தாங்கள் சமர்ப்பிக்க விரும்பும் கட்டுரையின் நகலை (தமிழ் அல்லது ஆங்கிலம்) எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். 5 நிமிடத்திற்குள் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சுயமாக எழுதப்பட்ட, தெளிவான, எடுத்துக்கொண்ட தலைப்புடன் தொடர்புடைய, நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் உள்ள கருத்துக்கள் கொண்ட கட்டுரைகளுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும். **தேர்வுக்குழுவின் முடிவு இறுதியானது**.

- பங்கேற்போர் சாதாரணமான படுக்கை போர்வையுடன், ஸ்வெட்டர், டார்ச் லைட் மற்றும் குடை போன்றவற்றையும் எடுத்துவர வேண்டும்.
- உடைகளைப் பொறுத்தவரை கண்ணியமாக, நமது நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உகந்தவையாக இருக்க வேண்டும். ஜீன்ஸ் மற்றும் மிகவும் இறுக்கமான உடைகளை முகாமில் அணியக்கூடாது. ஆண்கள்: கௌரவமான கலரில் பேண்ட், சர்ட்; பெண்கள்: சேலை/சுடிதார், சல்வார் கம்மீஸ்
- இது பாதுகாப்பான, எளிமையான, சைவ உணவுடன் கூடிய இருபாலருக்கும் தனித்தனியே தங்குமிடம் கொண்ட முழுநேர உறைவிட முகாம்.
- முகாமின் நிகழ்வுகள் அனைத்தும் தமிழிலேயே இருக்கும்.
- பங்குபெறுவோர் தங்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையை கண்டிப்பாக அணிந்து கொள்ள வேண்டும்.
- முகாமில் நண்பர்கள் அல்லது உறவினர்களை அழைத்துவர அனுமதியில்லை.
- நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரத்தில் அலைபேசி(cellphone) அனுமதிக்கப்படமாட்டாது.
- பங்குபெறுவோர் தாங்கள் கொண்டுவரும் பொருட்களுக்கு தாங்களே பொறுப்பு. நிர்வாகம் பொறுப்பல்ல.
- போதைப் பொருள்களை (சிகரெட், மது, போதை பொருள்கள்) பயன்படுத்துவது கண்டறியப்பட்டாலோ அல்லது நாகரீகமற்ற முறையில் நடந்துகொண்டாலோ அவர்கள் உடனடியாக முகாமைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்.

**முகாம் வருகைப்பதிவு** 28.11.2019 காலை முதல் மாலை 7 மணிவரை. உணவு, தங்குமிடம் முதலியவை 28.11.2019 மாலை முதல் பங்குபெறுவோருக்கு வழங்கப்படும். **வருகைப்பதிவு செய்யுமிடம்: ஆண்கள்:** வித்யாலய நுழைவு வாயில் எண்.4 வழியாக கலை அறிவியல் கல்லூரி விடுதி வளாகத்தில்; **பெண்கள்:** வித்யாலய நுழைவு வாயில் எண்.4 வழியாக ராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன(RKMVERI) விடுதி வளாகத்தில்.

**முகாம் கட்டணம் : உணவு, தங்குமிடம் மற்றும் புத்தகங்கள் உட்பட ஒருவருக்கு ரூ.500/-**

முகாமில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கட்டணத்தை டி.டி. அல்லது மணி ஆர்டராக **"Ramakrishna Mission Vidyalaya"** என்ற பெயருக்கு எடுத்து செயலர், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம், வித்யாலய அஞ்சல், கோவை – 641 020, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் செலுத்த விரும்புவர்கள் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் உள்ள **இளைஞர் முகாம் அலுவலகத்தில் காலை 9.30 முதல் 12.00 வரையிலும் மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும்** செலுத்தலாம். NEFT/RTGS மூலம் செலுத்த **Ramakrishna Mission Vidyalaya, Canara Bank, Gudalur Branch, Account No.1262101011392, Account Type: SB, IFSC Code: CNRB0001262**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கட்டணத்துடன் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 20-11-2019**
அதிகபட்சமாக 500 பேர் வரை கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு.

எங்களுடைய இணையதளத்திலிருந்தும் (www.srkv.org) முகாமிற்கான பதிவுப்படிவத்தை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

முகாம் 1.12.2019 மாலை 6 மணியுடன் முடிவடைவதால் பங்குபெறுவோர் அன்று மாலைத் தேநீருக்குப் பின் முகாமிலிருந்து புறப்படலாம். இரவுநேரப் பேருந்து மற்றும் ரயிலில் பயணம் செய்வோர் முன்அனுமதி பெற்றபிறகே வளாகத்தில் மேலும் தங்க அனுமதிக்கப்படுவர்.